பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 19/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.

(இஇ) கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 14/1992), மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 14/1992) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் ''
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 7—25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்து வதற்கென சட்டமுன் வடிவு கொண்டு வந்ததை வரவேற்று இந்தக் கால்நடை மருத்துவ அறிவியல் துறையின் மூலம் அனைத்து கால்நடைகளுக்கு வரும் நோய்களை உடனுக்குடன் போக்க அறிவியல் மருத்துவ துறையை மேலும் வலுப்படுத்த வேண்டுகிறேன். சில கால்நடை மருத்துவர்கள் நோயின் தன்மை அறியாது நோயைத் தடுக்க முறையாக மருந்துகள் இல்லாமல் நோயைக் குணப்படுத்தத் தவறிய சில கிராமங்களில் கால்நடைகள் இறந்து விடுகின்றன. இந்த நிலையைப் போக்க நல்ல மருந்துகளை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க இந்தக் கால் நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை திறம்பட நடத்த நியமிக்க உள்ள குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்க வும் வழிவகை செய்யும் இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எம்.ஆனந்தன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம், 1989 ஆம் ஆண்டு 42 ஆவது சட்டப் படி நிறுவப்பட்டது. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு

@ 2-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1992 ஏப்ரல் 27] [மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்]

கள் பல்கலைக்கழக சட்டம் 17 ஆவது பிரிவின்கீழ் வரையறுக் கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவின்படி மேலாண்மைக்குழு பல்கலைக்கழகத்தில் ஒரு அதிகார அமைப்பாகும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களிடையே இருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் மேலாண்மைக் குழுமத்தில் (வகை. 2) பிற உறுப்பினர் ஆவார். தற்போதுள்ள பிரிவு 18எச் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி மேற்படி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் சட்டமன்றப் பதவியை இழந்த பின்பும் மேலாண்மைக் குழும உறுப்பினராக இருக்க வகை உள்ளது. இவ்வகை நியதி மற்ற பல்கலைக்கழகச் சட்டங்களிலும் இருந் தன. சட்டப்பேரவை உறுப்பினராக இல்லாமல் பல்கலைக் கழகத்தின் மேலாண்மைக் குழுமத்தில் பதவி வகிப்பது உண் மையான சட்டபேரவை பிரதிநிதித்துவம் ஆகாது. இதனால் அரசு மற்ற பல்கலைக்கழகச் சட்டங்களை ஏற்கெனவே திருத் தம் செய்து உள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு கால்நடை மருத் துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழக சட்டத்திற்கு திருத் தம் கொண்டுவரும் திருத்தச் சட்டமுன்வடிவினை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

TRUTH ALONE TRIUMPHS

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 14/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)
சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28—4—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பேரவை பின்னர் 7-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.